சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – விடுதிகள் – 2012–2013 ஆம் ஆண்டு – ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு கட்டில்கள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை

நந்தன, தை 5 திருவள்ளுவர் ஆண்டு 2044

அரசாணை (நிலை) எண்.6 நாள்.18.1.2013

படிக்கப்பட்டது

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண். ந.க. எண்.த1/10486/2012, நாள்.23.05.2012, 26.06.2012, 11.07.2012 மற்றும் 29.10.2012.

----

ஆணை:–

2012–2013–ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன் குறித்து உறையாற்றியபோது

> "கல்லூரி விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவர்கள் தரையில் படுத்துறங்குவதை முற்றிலும் தவிர்க்க 2012–13–ஆம் ஆண்டில் கட்டில் வசதி ஏற்படுத்தித்தரப்படும்"

என அறிவித்துள்ளார்கள்.

2. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின் அடிப்படையில் விரிவான செயற்குறிப்பினை ஆணையர், ஆதிதிராவிடர் நலன் அவர்கள் அனுப்பியுள்ளார். அதன்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1317 மாணவர்/மாணவியர் விடுதிகள் இயங்கி வருவதாகவும் இவ்விடுதிகளில் 129 கல்லூரி விடுதிகள் ஆகும். இவற்றில் 68 கல்லூரி மாணவர் விடுதிகளும், 61 மாணவியர் விடுதியும் ஆகும். இவ்விடுதிகளில் 12616 மாணவர்/மாணவியர் தங்கி கல்வி பயில்வதாகவும், மாணவர்/மாணவியர்கள் தங்களின் படிப்பில் நாட்டம் செலுத்துவதை ஊக்குவிக்கவும் கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் இடைநிற்றல்

விழுக்காட்டை குறைக்கும் நோக்குடனும் தங்கும் இடத்தை படிப்பதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி கொடுக்கும் வகையில் இம்மாணவர்/மாணவியர்களுக்கு அடுக்கு கட்டில் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

3. மேலும், ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் தம்முடைய 29.10.2012 நாளிட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதி மாணவ / மாணவியர்களுக்கு இரண்டடுக்கு கட்டில்கள் வாங்கி வழங்கிட டான்ஸி (TANSI) நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று தேவைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன்படி இரண்டடுக்கு இரும்பு கட்டில் (Two tire Steel Cot) கட்டில் ஒன்றின் விலை ரூ.8455/– வீதம் தற்போது கட்டில் வாங்க வேண்டிய 67 (58+8+1) கல்லூரி விடுதி, முதுகலை கல்லூரி விடுதி மற்றும் சட்டக்கல்லூரி விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 7828 மாணவர்களுக்கு 3932 இரண்டடுக்கு கட்டில்கள் வாங்க ( 3932 X 8455) ரூபாய் 3,32,45,060/–ம் மற்றும் 58 (54+4) கல்லூரி விடுதி மற்றும் முதுகலை கல்லூரி விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 4588 மாணவியர்களுக்கு 2313 இரண்டடுக்கு கட்டில்கள் வாங்க (2313 X 8455) ரூபாய். 1,95,56,415/–ம் ஆக மொத்தம் 12416 மாணவ/மாணவியர்களுக்கு 6245 இரண்டடுக்கு கட்டில்கள் வாங்க ரூ.5,28,01,475 (ரூபாய் ஐந்து கோடியே இருபத்து எட்டு இலட்சத்து ஆயிரத்து நானூற்று எழுபத்து ஐந்து மட்டும்) செலவாகும் என்று தெரிவித்துள்ளார். இத்தொகையினை 2012 – 2013 ஆம் நிதியாண்டில் ஒப்பளிப்பு செய்யுமாறும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச் சட்டம் 1998, பிரிவு 16 (f)ன் படி அறைகலன்களை (Furniture) டான்ஸி (TANSI) நிறுவனத்திடமிருந்து வாங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

4. ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று 2011 – 2012 ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட 4 கல்லூரி விடுதிகளுக்கு (3 மாணவியர் விடுதிகள், 1 மாணவர் விடுதி) ஒப்பளிக்கப்பட்ட தொகையில் கட்டில் வாங்கும் செலவினம் உள்ளடங்கி உள்ளதால் அவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் 200 மாணவ / மாணவியர்கள் நீங்கலாக ஏனைய 125 கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் 12416 மாணவ/மாணவிகளுக்கு இரண்டடுக்கு இரும்புக் கட்டில் (Two Tire Steel Cot) வாங்கி வழங்கும் வகையில் ஒரு கட்டில் ரூ.8,455/– என்ற விலையில் 67 (58+8+1) கல்லூரி விடுதி, முதுகலை விடுதி மற்றும் சட்டக்கல்லூரி விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 7828 மாணவர்களுக்கு 3932 இரண்டடுக்கு கட்டில்கள் வாங்க (3932x8455/-) ரூபாய் 3,32,45,060/–ம் மற்றும் 58(54+4) கல்லூரி விடுதி மற்றும் முதுகலை விடுதிகளில் அனுமதிக்கப்படும் 4588 மாணவியருக்கு 2313 இரண்டடுக்கு கட்டில்கள் வாங்க (2313 x 8455) ரூபாய் 1,95,56,415/–ம் ஆக மொத்தம் 12416 மாணவ / மாணவியர்களுக்கு 6245 இரண்டடுக்கு கட்டில்கள் வாங்க ரூ.5,28,01,475/–ஐ (ரூபாய் ஐந்து கோடியே

இருபத்து எட்டு இலட்சத்து ஆயிரத்து நானூற்று எழுபத்து ஐந்து மட்டும்) கீழ்க்கண்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

1. மொத்த செலவினம் ரூ.5,28,01,475/–க்கு உட்பட்டு மேற்கொள்ளப்படவேண்டும்.

2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச் சட்டம் 1998, பிரிவு 16 (f)-ன் படி டான்ஸி (TANSI) நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட இரண்டடுக்கு கட்டில்களை வாங்கி வழங்கப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பிரித்து பற்று வைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஆம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் – KD – மாணவரில்லங்கள் – 05–அலுவலகச் செலவுகள் – 05 – அறைகலன்" (த.தொ.கு. 2225 01 277 KD 0558" | ரூ.4,89,20,630/– |
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – 12ஆம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் – KE – ஆதிதிராவிடர் நல பட்டமேற்படிப்பு மாணவர் இல்லத்தை தொடங்குதல் – 05 –அலுவலகச் செலவுகள் – 05 – அறைகலன்" (த.தொ.கு. 2225 01 277 KE 0556" | ரூ. 38,80,845/– |
| மொத்தம் : | ரூ.5,28,01,475/– |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ஆணையர் ஆதிதிராவிடர் நலம் அவர்கள் பெற்று பத்தி 4–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி அடுக்கு கட்டில்களை வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை பகிர்ந்தளிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இது ஒரு 'புதுத்துணைப் பணி' குறித்த செலவினமாகும். இச்செலவினம் 2012–13–ஆம் ஆண்டு துணை மானியக்கோரிக்கை –I-ல் சேர்க்கப்பட்டு சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு ரூ.1000/– மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை 2012–13–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதிஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2012–13–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஆணையர் ஆதிதிராவிடர் நலன் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. 2012–13–ஆம் ஆண்டிற்கான திருத்திய/இறுதி திருத்த நிதிஒதுக்கத்திற்கான முன்மொழிவுகளை நிதி(ஆதி(ம)பந)துறைக்கு அனுப்பும் போது இதனையும் சேர்த்து அனுப்புமாறு ஆணையர் ஆதிதிராவிடர் நலன் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள 6245 கட்டில்களும் வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண். 313/DS/12 நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலம்)துறை நாள்4.1.2013 மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண். 1422 (ஆயிரத்து நானூற்று இருபத்திரண்டு) ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்.
அரசு செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்:
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/6.
கணக்காய்வுத் தலைவர் (CAB), சென்னை–9.

நகல்:–
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.

அமைச்சர்(நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அமைச்சர் (ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலன்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை (ஆதி(ம)பந) சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொI/வ.செ.பொ.II)துறை, சென்னை–9.
திட்டம் மற்றும் வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துறை , சென்னை–9.
அரசு செயலரின் தனிச்செயலர்,
ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1, ஆதிந2, ஆதிந3, ஆதிந7, ஆதிந8, ப.மே1, ப.மே2, க.மா.பா)துறை, சென்னை–9
இருப்புகோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு.விஜயபாஸ்கரன்.
18/11/2013
பிரிவு அலுவலர்.

ப

**இணைப்பு**

அரசாணை நிலை எண். 6 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
நாள். 18.01.2013

## இரண்டடுக்கு கட்டில் வழங்க வேண்டிய கல்லூரி மாணவர் விடுதிகளின் விவரம்

| வ. எண் | மாவட்டம் | | இடம் | 2011–12ஆம் ஆண்டு பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை | கட்டில் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 1 | அரியலூர் | 170 | 85 |
| 2 | சென்னை | 2 | மேற்கு சிஐடி நகர் | 539 | 270 |
| | | 3 | இணைப்பு | 55 | 28 |
| | | 4 | நந்தனம் | 374 | 187 |
| | | 5 | கோடம்பாக்கம் | 275 | 138 |
| | | 6 | பெரம்பூர்/வில்லிவாக்கம் | 353 | 177 |
| | | 7 | வில்லிவாக்கம் | 55 | 28 |
| | | 8 | கோடம்பாக்கம் | 110 | 55 |
| 3 | கோயம்புத்தூர் | 9 | பொள்ளாட்சி | 50 | 25 |
| | | 10 | கோயம்புத்தூர் | 235 | 118 |
| | | 11 | கோயம்புத்தூர் | 57 | 29 |
| 4 | கடலூர் | 12 | சி.முட்லூர் | 55 | 28 |
| | | 13 | விருதாச்சலம் | 66 | 33 |
| | | 14 | கடலூர் | 88 | 44 |
| 5 | தர்மபுரி | 15 | தர்மபுரி | 442 | 221 |
| 6 | திண்டுக்கல் | 16 | திண்டுக்கல் | 64 | 32 |
| | | 17 | பழனி | 136 | 68 |
| 7 | ஈரோடு | 18 | ஈரோடு | 165 | 83 |
| 8 | காஞ்சிபுரம் | 19 | செங்கல்பட்டு | 30 | 15 |
| | | 20 | காஞ்சிபுரம் | 50 | 25 |
| 9 | கன்னியாகுமரி | 21 | நாகர்கோவில் | 129 | 65 |
| 10 | கரூர் | 22 | தான்தோன்றிமலை | 110 | 55 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | கிருஷ்ணகிரி | 23 | கிருஷ்ணகிரி | 181 | 91 |
| 12 | மதுரை | 24 | திருப்பறங்குன்றம் | 83 | 42 |
| | | 25 | சிறுதூர் மதுரை | 63 | 32 |
| 13 | நாகப்பட்டினம் | 26 | மயிலாடுதுறை | 55 | 28 |
| 14 | நாமக்கல் | 27 | நாமக்கல் | 160 | 80 |
| | | 28 | இராசிபுரம் | 60 | 30 |
| 15 | நீலகிரி | 29 | ஊட்டி | 73 | 37 |
| 16 | புதுக்கோட்டை | 30 | புதுக்கோட்டை | 240 | 120 |
| 17 | இராமநாதபுரம் | 31 | லந்தை | 116 | 58 |
| | | 32 | பரமக்குடி | 58 | 29 |
| 18 | சேலம் | 33 | வடசென்னிமலை | 60 | 30 |
| | | 34 | சேலம் | 275 | 138 |
| 19 | சிவகங்கை | 35 | சிவகங்கை | 67 | 34 |
| | | 36 | பூலாங்குறிச்சி | 66 | 33 |
| | | 37 | காரைக்குடி | 67 | 34 |
| 20 | தஞ்சாவூர் | 38 | கும்பகோணம் | 55 | 28 |
| | | 39 | தஞ்சாவூர் | 97 | 49 |
| 21 | தேனி | 40 | ஆண்டிப்பட்டி | 54 | 27 |
| 22 | திருப்பூர் | 41 | திருப்பூர் | 66 | 33 |
| 23 | திருவள்ளூர் | 42 | திருத்தணி | 55 | 28 |
| | | 43 | பொன்னேரி | 55 | 28 |
| 24 | திருவாரூர் | 44 | திருவாரூர் | 158 | 79 |
| | | 45 | மன்னார்குடி | 67 | 34 |
| 25 | தூத்துக்குடி | 46 | நாகம்பட்டி | 55 | 28 |
| | | 47 | தூத்துக்குடி | 83 | 42 |
| 26 | திருச்சி | 48 | திருச்சி | 334 | 167 |
| 27 | திருநெல்வேலி | 49 | திருநெல்வேலி | 54 | 27 |
| | | 50 | பாளையங்கோட்டை | 106 | 53 |

3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 28 | திருவண்ணாமலை | 51 | திருவண்ணாமலை | 64 | 32 |
| | | 52 | செய்யார் | 64 | 32 |
| 29 | வேலூர் | 53 | வாணியம்பாடி | 64 | 32 |
| | | 54 | குடியாத்தம் | 50 | 25 |
| | | 55 | வேலூர் | 106 | 53 |
| 30 | விழுப்புரம் | 56 | விழுப்புரம் | 158 | 79 |
| | | 57 | திண்டிவனம் | 55 | 28 |
| 31 | விருதுநகர் | 58 | அருப்புக்கோட்டை | 55 | 28 |
| | | | | 7087 | 3557 |

## இரண்டடுக்கு கட்டில் வழங்க வேண்டிய கல்லூரி மாணவியர் விடுதிகளின் விவரம்

| வ. எண் | மாவட்டம் | | இடம் | 2011-12ஆம் ஆண்டு பயின்ற மாணவியர்கள் எண்ணிக்கை | கட்டில் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | ராயபுரம் | 160 | 80 |
| | | 2 | ராயபுரம் | 135 | 68 |
| | | 3 | ராயபுரம் | 55 | 28 |
| 2 | கோயம்புத்தூர் | 4 | பொள்ளாட்சி | 50 | 25 |
| | | 5 | சிங்காநல்லூர் | 57 | 29 |
| | | 6 | கோயம்புத்தூர் | 61 | 31 |
| 3 | கடலூர் | 7 | கடலூர் | 72 | 36 |
| | | 8 | சிதம்பரம் | 55 | 28 |
| 4 | தர்மபுரி | 9 | தர்மபுரி | 126 | 63 |
| | | 10 | தர்மபுரி | 99 | 50 |
| 5 | திண்டுக்கல் | 11 | திண்டுக்கல் | 108 | 54 |
| 6 | ஈரோடு | 12 | ஈரோடு | 99 | 50 |
| 7 | கன்னியாகுமரி | 13 | அருள்நகர் | 55 | 28 |
| 8 | கரூர் | 14 | தான்தோன்றிமலை | 60 | 30 |
| 9 | கிருஷ்ணகிரி | 15 | கிருஷ்ணகிரி | 70 | 35 |
| 10 | மதுரை | 16 | முன்னுமாவடி | 66 | 33 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 17 | சொக்கிக்குளம் | 121 | 61 |
| | | 18 | மேலூர் | 66 | 33 |
| 11 | நாகப்பட்டினம் | 19 | மயிலாடுதுறை | 72 | 36 |
| 12 | நாமக்கல் | 20 | நாமக்கல் | 93 | 47 |
| 13 | நீலகிரி | 21 | ஊட்டி | 110 | 55 |
| 14 | பெரம்பலூர் | 22 | பெரம்பலூர் | 96 | 48 |
| 15 | புதுக்கோட்டை | 23 | புதுக்கோட்டை | 147 | 74 |
| | | 24 | புதுக்கோட்டை | 156 | 78 |
| 16 | இராமநாதபுரம் | 25 | இராமநாதரம் | 101 | 51 |
| | | 26 | பரமக்குடி | 55 | 28 |
| 17 | சேலம் | 27 | தலைவாசல் | 50 | 25 |
| | | 28 | சேலம் மணக்காடு | 65 | 33 |
| | | 29 | சேலம் | 156 | 78 |
| 18 | சிவகங்கை | 30 | சிவகங்கை | 67 | 34 |
| | | 31 | சிவகங்கை | 61 | 31 |
| | | 32 | காரைக்குடி | 67 | 34 |
| 19 | தஞ்சாவூர் | 33 | கும்பகோணம் | 55 | 28 |
| | | 34 | தஞ்சாவூர் | 97 | 49 |
| 20 | தேனி | 35 | தேனி | 50 | 25 |
| | | 36 | பெரியகுளம் | 50 | 25 |
| | | 37 | ஆண்டிப்பட்டி | 50 | 25 |
| 21 | திருப்பூர் | 38 | திருப்பூர் | 55 | 28 |
| 22 | திருவள்ளூர் | 39 | திருத்தணி | 55 | 28 |
| | | 40 | பொன்னேரி | 55 | 28 |
| 23 | திருவாரூர் | 41 | திருவாரூர் | 55 | 28 |
| | | 42 | மன்னார்குடி | 55 | 28 |
| 24 | தூத்துக்குடி | 43 | தூத்துக்குடி | 99 | 50 |
| 25 | திருச்சி | 44 | திருச்சி | 151 | 76 |
| | | 45 | முசிறி | 55 | 28 |
| 26 | திருநெல்வேலி | 46 | திருநெல்வேலி | 71 | 36 |
| | | 47 | குற்றாலம் | 56 | 28 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 48 | பாளையங்கோட்டை | 69 | 35 |
| 27 | திருவண்ணாமலை | 49 | திருவண்ணாமலை | 45 | 23 |
| 28 | வேலூர் | 50 | வாலாஜா | 91 | 46 |
| 29 | விழுப்புரம் | 51 | விழுப்புரம் | 77 | 39 |
| | | 52 | திண்டிவனம் | 127 | 64 |
| 30 | விருதுநகர் | 53 | விருதுநகர் | 84 | 42 |
| | | 54 | சாத்தூர் | 55 | 28 |
| | | | | 4368 | 2201 |

இரண்டடுக்கு கட்டில் வழங்க வேண்டிய முதுகலை கல்லூரி மாணவர் விடுதிகளின் விவரம்

| வ. எண் | மாவட்டம் | | இடம் | 2011–12ஆம் ஆண்டு பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை | கட்டில் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | இராயபுரம் | 193 | 97 |
| 2 | கடலூர் | 2 | சிதம்பரம் | 55 | 28 |
| 3 | மதுரை | 3 | மதுரை | 97 | 49 |
| 4 | இராமநாதபுரம் | 4 | பரமக்குடி | 55 | 28 |
| 5 | திருச்சி | 5 | திருச்சி | 113 | 57 |
| 6 | திருநெல்வேலி | 6 | பாளையங்கோட்டை | 55 | 28 |
| 7 | வேலூர் | 7 | வேலூர் | 61 | 31 |
| 8 | விருதுநகர் | 8 | விருதுநகர் | 57 | 29 |
| | | | | 686 | 347 |

## இரண்டடுக்கு கட்டில் வழங்க வேண்டிய முதுகலை கல்லூரி மாணவியர் விடுதிகளின் விவரம்

| வ.எண் | மாவட்டம் | | இடம் | 2011-12ஆம் ஆண்டு பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை | கட்டில் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | இராயபுரம் | 55 | 28 |
| | | 2 | இராயபுரம் (இணைப்பு) | 55 | 28 |
| 2 | நாமக்கல் | 3 | நாமக்கல் | 55 | 28 |
| 3 | வேலூர் | 4 | வேலூர் | 55 | 28 |
| | | | | 220 | 112 |

## இரண்டடுக்கு கட்டில் வழங்க வேண்டிய சட்டக் கல்லூரி மாணவர் விடுதியின் விவரம்

| வ.எண் | மாவட்டம் | | இடம் | 2011-12ஆம் ஆண்டு பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை | கட்டில் வழங்கப்பட வேண்டிய எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | சேலம் | 1 | சேலம் | 55 | 28 |

/உண்மை நகல்/

அ. விஜயலட்சுமி 18/1/2013
பிரிவு அலுவலர்